பாடம் 02

அழைப்பு

இறை ஆசிகள்.

அன்பு மகனே, மகளே,

இந்தக் கடிதத்தை எழுதும் நான் இயேசுவோடு கூட இருந்த சீடன் பேதுரு. நான் உங்களை அழைக்கிறேன். இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறைவன் தம் அன்பை மனிதர்களாகிய எம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்பினார்.

அன்று வாழ்ந்த மக்கள் மத்தியிலிருந்து விசேடமானவர்களைத் தெரிந்து கொண்டார். அவர்களைக் குல முதுவர்கள் என்று அழைக்கிறோம்.

இறை வழிபாடு செய்ய, இறைவனைப் பற்றி அறிய, அவரில் விசுவாசம் கொள்ள, அவர்கள் மக்களுக்கு உதவி செய்தார்கள். (கூட்டமாக) ஒரு சமூகமாக வாழும் போது நல்லுறவு கொண்டு, ஒருவரை ஒருவர் அறிந்து வாழ வேண்டிய முறையைக் கற்றுக் கொடுத்தார்கள்.

குல முதுவர்களுக்குப் பின், இறைவன் தம்முடைய மக்களை வழிநடத்துவதற்கு மோசேயைத் தெரிந்து கொண்டார்.

மக்களுக்கு இறை அன்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு; அன்று சீனாய் மலை உச்சியில் இறைவன் மோசேயுடன் உரையாடினார். இறை வார்த்தைகளை மோசே இரண்டு கற்பலகைகளில் எழுதினார். அவற்றை மக்களுக்குக் கொடுத்தார். அவை பத்துக் கற்பனைகள் எனப்படும்.

அன்பின் பத்துக் கற்பனைகள்

1. ஒரே இறைவனை விசுவசித்து வழிபடுங்கள்
2. இறைவனின் திருப்பெயருக்கு மரியாதை செய்யுங்கள்
3. இறைவனுடைய நாளைப் புனிதமாகக் கடைப்பிடியுங்கள்
4. பெற்றோரை, ஆசிரியரை, முதியோரை மதித்து நடவுங்கள்.
5. சகல உயிர்களையும் பாதுகாருங்கள்
6. நல்ல நடத்தையுடையவர்களாக இருங்கள்.
7. களவு செய்யாதீர்கள்
8. உண்மை பேசுங்கள்
9. மற்றவர்கள் மட்டிலும் நல்ல நடத்தையுடையவர்களாக இருங்கள்.
10. மற்றவர்களுடைய செல்வங்களை, தமதாக்கிக் கொள்ளாமல் அவற்றைப் பாதுகாருங்கள்.

இந்த அன்புக் கற்பனைகள் மூலம் மக்களை உடன்படிக்கை வாழ்வில் ஈடுபடுத்தினார். உடன்படிக்கை வாழ்க்கையை வாழ்ந்த மக்கள் சிறிது காலத்தின் பின்னர் இறைவனை மறந்தார்கள். இறை அன்பை வளர்ப்பதற்கு இறைவன் ஒரு வழியை ஆக்கினார். இறைத் தந்தையின் ஒரே மகனை, இயேசுவை மண்ணுலகிற்கு அனுப்பினார். அவர் எந்த வேளையும் மற்றவர்களுக்கு உதவி செய்தார். துன்ப வேதனைகள் மத்தியில் வாழ்ந்து இறை அன்பைப் பற்றிக் கற்பித்தார். பிழைகளை நிவர்த்தி செய்தார். நோயாளரைக் குணமாக்கினார். கைவிடப்பட்டவர்களைத் தேடிச் சென்றார். பெற்றோருக்கும் பெரியோருக்கும் உதவி செய்தார். சீடர்கள் பன்னிருவரைத்

தேர்ந்தெடுத்து ஒரு குழுவை உருவாக்கினார். உலகம் முழுவதிலும் இயேசுவுக்குச் சான்று பகர அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். இறைத் தந்தைக்கு அன்பு செய்யும் முறையையும் இறை அன்பைப் பெறும் முறையையும் எங்களுக்குக் கற்பித்தார்.

அன்று இயேசு உருவாக்கிய அந்தச் சிறிய குழு இன்று உலகில் எல்லா இடங்களிலும் பரந்துள்ளது. இது இன்று பரிசுத்த திருச்சபை என அழைக்கப்படுகிறது. இது இயேசு உருவாக்கிய பரிசுத்த திருச்சபையாகும். அந்தப் பரிசுத்த திருச்சபைக்குத் தலைவனாகும் வரம் எனக்குக் கிடைத்தது.

அன்பின் அழைப்பு

நான் உங்களை அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள் என்று இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

ஆகவே மகனே, மகளே!

இறைத் தந்தை, இயேசு எப்போதும் உங்களோடு இருக்கிறார். உங்களை அன்பு செய்கிறார். உங்களைப் பாதுகாக்கிறார்.

நாமும் இயேசுவைப் போல் இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்.

இப்படிக்கு,
இயேசுவின் அன்புச் சீடன்,
சீமோன் பேதுரு.

இவற்றை உங்களால் செய்ய முடியுமா? என்று பாருங்கள்.
மனனம் செய்யுங்கள்.

இறைத் தந்தையை உன் முழு மனதோடும் முழு ஆன்மாவோடும் உன் முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக.

நீங்கள் உங்களை அன்பு செய்வதைப் போல, மற்றவர்களையும் அன்பு செய்யுங்கள்.

இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள்.